**MCOP. 33/ 2023- PW1 .**
**திரு. சுரேஷ், த/பெ.ஹனுமையா**
**நாள்:09.10.2025.**
**குறுக்கு விசாரணை 4 வது எதிர் மனுதாரர் தரப்பில் :**

விபத்தானது ஒரு இருசக்கரவாகனத்திற்கும் மற்றொரு இருசக்கரவானத்திற்கும் இடையே நடந்தது என்று சொன்னால் சரிதான். இரண்டு இருசக்கர வாகனங்களும் மோதியதால் நான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரி. நான் கீழே விழுந்த உடன் என் மீது கார் ஏறிவிட்டது. நாங்கள் புகார் கொடுக்கும் போது இருசக்கரவாகனத்தின் மீது தான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். என் மீது இடித்த வாகனமானது **Bajaj Discover** வாகனம் என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது எதிர் திசையில் வந்த இருசக்கரவாகனம் என் மீது மோதியது என்றால் சரிதான். **Bajaj Discover** வாகனம் என் வாகனத்தின் மீது மோதாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடக்க வாய்பு இல்லை என்றால் சரிதான். நான் சென்ற இருசக்கரவாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன். அந்த வாகனத்தை ஓட்டும் போது நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. இருசக்கரவாகனம் ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அசல் தொலைந்துவிட்டது. ஜெராக்ஸ் எனது வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். விபத்து நடந்த உடன் புகார் யார்கொடுத்தார் என்றால் நான் தான் கொடுத்தேன். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தவர் பெயர் குரு ஆகும். குருவின் மனைவி சிவகாமி தான் புகார் கொடுத்திருக்கிறார் என்றால் நான் மருத்துவமனையில் இருக்கும் போது போலீசாரிடம் நானும் புகார் கொடுத்தேன். சிவகாமி கொடுத்தபுகாரில் இருசக்கர வாகனம் மோதியாதாக தான் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த வாகனம் மோதியதால் தான் நாங்கள் இருவரும் கீழே விழுந்துவிட்டோம் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனம் எங்கள் மீது மோதாமல் இருந்திருந்தால் விபத்து நடக்க வாய்பில்லை என்றால் சரிதான். இரண்டு இருசக்கர வாகனங்களும் மோதி நாங்கள் கீழே விழுந்ததால் கார் செல்வதற்கு வழியில்லாமல் இருசக்கர வாகனத்தின் மீது கார் மோதியது என்றால் குருவின் மீது கார் ஏறிவிட்டது. **Bajaj Discover** வாகனத்தை ஓட்டி வந்த சிவகுமார் என்பவர் மீது **STC No.347/2022** வழக்கில் நான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சிவக்குமாருக்கு அபதாரம் ரூ.**3000** விதிக்கப்பட்டுள்ள விரம் தெரியுமா என்றால் தெரியும். நான் மருத்துவமனையில் சேரும் போது இருசக்கரவாகனங்கள் மோதியதாக தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் **TN 70 AC 3022** என்னுடையது தான். எனது வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டுஇருசக்கர வாகனங்கள் மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், காருக்கும் இந்த விபத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், பொய்யான புகாரின் அடிப்படையில் கார் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. எனக்கு ஏதாவது

இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் நான் 2 வது எதிர்மனுதாரிடம் தான் கேட்டிருக்கவேண்டும் என்றும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களை நான் இந்த வழக்கில் சேர்த்திருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனை செலவு பில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு லேசான காயம் என்றும் அதனால் தான் நான் மருத்துவமனை பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ, செயல் திறன் பாதிப்போ, வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரிலும், எல்லா ஆவணங்களிலும் இரண்டு இருசக்கரவாகனங்கள் தான் மோதியதாக இருக்கிறது என்றும், 4 வது எதிர்மனுதாரருக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தான் நான் இழப்பீடு கோரவேண்டும் என்றும் 3 மற்றும் 4 எதிர்மனுதாரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.